செ. வெ. எண் :- 618 நாள் :- 23.07.2010

தாட்கோ நிதி உதவியுடன் நிலம் வாங்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின

பெண்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண சலுகை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் தாட்கோ நிறுவனத்தால் "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நிலம் வாங்கும் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நிலம் கிரையம் பெறும் பெண்களுக்கு அக்கிரையம் தொடர்பான முதல் கிரைய ஆவணத்துக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து 75% அளவுக்கு விலக்கு அரசாணை 115 வணிகவரித்துறை நாள் 9.07.2004 மூலம் தமிழக அரசால் வழங்கப்பட்டது. எஞ்சிய 25% முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் பயனாளிகளால் செலுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு வழங்கப்பட்டு வந்த 75% முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண சலுகையினை 100% சலுகையாக உயர்த்தி வழங்கிட முடிவு செய்து தமிழக அரசு அதற்கான அரசாணையினை அ.ஆ.எண்129 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள் 22.07.10 மூலம் வெளியிட்டுள்ளது. இந்த ஆணை 19.07.10 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துவதை நோக்கமாக கொண்ட இந்த நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெறும் பெண்களுக்கு இச்சலுகை மேலும் பயன்தரும்.

(கையொப்பம்)
23.7.2010
பதிவுத்துறைத் தலைவருக்காக.

23.7.10

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9